**<u>நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்</u>**

**<u>முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.,</u>**

**<u>நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்</u>**

**<u>2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை</u>**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 62/2020**

**<u>CNR.No. TNDG03-002466-2020</u>**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம்,
திண்டுக்கல்
குற்ற எண். 308/2019
U/s. 379 IPC ... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

1. ஷேக்பரீத் (22/2019), – A1
த/பெ. மைதீன்,
பூச்சிநாயக்கன்பட்டி,
பேகம்பூர்,
திண்டுக்கல்.

2. பிச்சைமைதீன் (24/2019), – A2
த/பெ. வேளாங்கன்னி தெரு,
மேட்டுப்பட்டி,
திண்டுக்கல். ...எதிரிகள்

**<u>Case – Summary</u>**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 62 of 2020 |

<table>
<tr><td>2.</td><td>Name of the Police station and crime Number</td><td colspan="3">State Represented by<br>Inspector of Police, Thadicombu Police Station, Dindigul in Cr.No. 308/2019</td></tr>
<tr><td>3.</td><td>Name of the accused</td><td colspan="3">1. Seikfarith<br>2. Ptichaimaideen</td></tr>
<tr><td>4.</td><td>Father’s Name</td><td colspan="3">1. Maideen<br>2. Summer Ali</td></tr>
<tr><td>5.</td><td>Occupation</td><td colspan="3">-</td></tr>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">1. Poochinayackanpatti, Begambur, Dindigul<br><br>2. Velankanni Street, Mettupatti, Dindigul.</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">22/2020<br>24/2020</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">27.07.2019</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">28.07.2019<br>13.02.2020</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">18.09.2019</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">25.04.2020 - A1<br>25.04.2020 - A2</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s.207 Cr.P.C.</td><td colspan="3">20.05.2025</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 24.06.2025 the accused questioned on substance of accusation U/s.379 IPC. Accused denied the case as false and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="4">15</td><td rowspan="4">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>17.02.26</td><td>17.02.26</td></tr>
<tr><td>PW2</td><td>17.02.26</td><td>17.02.26</td></tr>
<tr><td>PW3</td><td>17.02.26</td><td>17.02.26</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | PW4 | 17.02.26 | 17.02.26 |
| | | PW5 | 17.02.26 | 17.02.26 |
| | | PW6 | 09.03.26 | 09.03.26 |
| | | PW7 | 10.03.26 | 10.03.26 |
| | | PW8 | 17.03.26 | 17.03.26 |
| 16. | The date of examination of the accused under section 313 of the code – Closed of trial | 17.04.2026 | | |
| 17. | Sentence on order | முடிவாக, 1, 2 எதிரிகள் தான் புகார்தாரர் அணிந்திருந்த நகையை திருடினார்கள் என்பதை அரசு தரப்பிலிருந்து எதிரிகள் மீதான இதச பிரிவு 379–ன் கீழான குற்றச்சாட்டை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உதந்தது என்று கருதி, 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. | | |
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts | | |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case | | |
| 20. | Property order | Property order passed. | | |

இவ்வழக்கு 13.02.2020ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.62/2020 ஆக

கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை−2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கார்த்திக்கேயன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>தீர்ப்புரை</u>

### <u>I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 27.07.2019 ம் தேதி இரவு 21.30 மணிக்கு திண்டுக்கல் சித்தேஷ் கார் கம்பெனி அருகே இவ்வழக்கின் புகார்தாரர் TN 57 BD 5024 TVS Suzuki Access மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டும், மேற்படி இருசக்கர வாகனத்தை புகார்தாரரின் கணவர் ஓட்டிக்கொண்டு கிழக்கே இருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருந்தபோது, அவர்களுக்குப் பின்னால் TN 39 AU 5148 என்ற ஸ்பிளன்டர் மோட்டார் சைக்கிளை 1ம் எதிரி ஓட்ட, 2ம் எதிரி பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு புகார்தாரர் சென்ற இருசக்கர வாகனத்திற்குப் பின்னால் சென்று புகார்தாரர் கழுத்தில் அணிந்திருந்த சுமார் ரூ. 82,500/− பெறுமானமுள்ள சுமார் 5 1/2 பவுன் எடையுள்ள குண்டு, காசுடன் கூடிய தங்க தாலி செயினை அத்துக் கொண்டு எதிரிகள் இருவரும் மேற்படி இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதச படி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல்

நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>II. வழக்கின் நகல்கள் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு குறித்து வினவுதல்:</u>**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிகளுக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிகளுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பி அவர் முன்னிலையானவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் 20.05.2025 ம் நாள் அன்று வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான சட்டப்பிரிவு 379 இதச-ன் கீழான குற்றச்சாட்டை விளக்கி வினாவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் எதிரிகளுக்கு எதிராக இதச சட்டப்பிரிவு 379-ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளிகள் இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**<u>III. அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

3. அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள்

குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>IV. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :</u>**

4. அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 27.07.2019 ம் தேதி இரவு 09.30 மணியளவில் தானும் தனது கணவரும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது தனது கழுத்தில் அணிந்திருந்த நகையை திருடர்கள் இரண்டுபேர்கள் அத்துச் சென்றதைப் பற்றியும், அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலமாக புகார் அ.சா.ஆ.1 என்றும், சிடியுடன் கூடிய புகைப்படம் அ.சா.ஆ.2 என்றும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. கேள்விப்பட்ட சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் அவரது சாட்சியத்தில் கடந்த 27.07.2019 ம் தேதி இரவு 09.30 மணிக்கு தங்களது பள்ளியில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்த பெஞ்சமின் என்பவர் அவரது மனைவியுடன் சென்றபோது, அவரது மனைவியின் செயினை எதிரிகள் அத்துச் சென்றார்கள் என்று தனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள் என்றும், இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6. பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4, அ.சா.5 ஆகியோர்கள் தங்களது சாட்சியத்தில் கடந்த 28.07.2019 ம் தேதி காலை 11.00 மணிக்கு திருச்சி – திண்டுக்கல் ரோட்டில் உள்ள சித்தேஷ்கார் கம்பெனி அருகே போலீசார் படம் வரைந்து தங்களிடம் கையொப்பம்

பெற்றார்கள் என்றும், பார்வை மகஜர் அ.சா.ஆ.3 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

7. ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 அவரது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் தனது முதலாளி வீட்டில் நகை திருடுபோயிருந்தது என்றும், பின்பு எதிரிகளை பிடித்து நகையை மீட்டார்கள் என்றும், பேங்கில் வைத்து நகையை கைப்பற்றியபோது தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அதில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

8. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.7 அவரது சாட்சியத்தில் கடந்த 28.07.2019ம் தேதி தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண். 308/2019 சட்டப்பிரிவு 379 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.7 தனது சாட்சியத்தில் கடந்த 28.07.2019ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலைய குற்ற எண். 808/2019 சட்டப்பிரிவு 379 இதச ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வைத்திருந்ததை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, 11.09.2019ம் தேதி 12.30 மணிக்கு வாகன தணிக்கை செய்தபோது TN 39 AU 5148 என்ற இருசக்கர வாகனத்தை நிறுத்தி விசாரித்தபோது அவர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டதாக ஒப்புக் கொண்டதை சாட்சிகள் முன்னிலையில் பதிவு

செய்ததாகவும், பின்பு எதிரிகளை கைது செய்தது குறித்தும், பின்பு எதிரி வீட்டில் மறைத்து வைத்திருந்த சுமார் 5 1/2 பவுன் தங்க தாலி செயினை எதிரி தனது வீட்டின் தாழ்வாரத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சியில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், வழக்குச் சொத்தை RPR No. 164/2019 ஆக ஒப்படைத்ததாகவும், பின்பு தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 379 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 என்றும், அத்தாட்சி அ.சா.ஆ.10 என்றும், படிவம் 91 அ.சா.ஆ.11 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

## V. எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்

10. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்ட பின்பு எதிரிகளுக்குப் பாதகமான அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 17.04.2026ம் தேதி தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தார்கள்.

## VI. எதிரிகள் தரப்பு சாட்சிகள்

11. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறினார்கள். அதனால், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

## VII. வாதுரைகள்

### 1. அரசு தரப்பில் வாதுரை:

12. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பு எதிரிகளின் மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதாகவும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கில் எதிரிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

### 2. எதிரிகள் தரப்பில்

13. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிகள் மீது இவ்வழக்கு தவறாக பதியப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் எதிரிகளை அடையாளப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

## VIII.ஆய்விற்குரிய பிரச்சனை

14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமாக சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

## IX. தீர்வு

15. இவ்வழக்கு தீர்ப்புரையை படிக்கும்போது சிரமமின்றி புரிந்து கொள்வதற்காகவும், விவாதம் செய்யப்பட்ட தலைப்பு மீண்டும் விவாதிக்கப்படாமல் தடுப்பதற்காகவும், இந்த தீர்ப்புரையானது மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- குற்ற நிகழ்வு
- கைது, ஒப்புதல் வாக்குமூலம், அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்
- புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?

## குற்ற நிகழ்வு

16. மேற்சொன்ன குற்ற நிகழ்வு அரசு தரப்பால் சொல்லப்படும் இடத்தில் தான் நடந்துள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அரசு தரப்பில் இருந்து குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.1 ஆன புகாரில் "கடந்த 27.07.2019 ம் தேதி இரவு சுமார் 09.30 மணிக்கு டிபன் சாப்பிட பைபாஸ் பாலாஜி பவன் ஹோட்டல் செல்வதற்காக திருச்சி – திண்டுக்கல் NH 45

சித்தேஷ் கார்கள் அருகே நான் பின்னால் அமர்ந்து கொள்ள எனது கணவர் டுவீலரை ஓட்டிக்கொண்டு வந்தபோது எங்கள் டுவீலர் மீது மோதுவது போல் வந்து அந்த டுவீலரில் பின்னால் இருந்த நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த சுமார் 10 பவுன் தங்க சங்கிலியை பறித்துக் கொண்டு இருவரும் பறித்த செயினுடன் தப்பிச் சென்றார்கள்" என்று புகார்தாரர் புகார் அளித்துள்ளார்.

17. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.8 ஆன முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும் போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்ட மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்ட பார்வை மகஜர் போன்றவற்றைப் பரிசீலனை செய்யும்போதும் மற்றும் இவ்வழக்கில் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்ட அத்தாட்சியின் மூலம் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தைப் பரிசீலனை செய்யும் போதும் குற்ற நிகழ்வு நடந்துள்ளது என்பதை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. இருப்பினும், எதிரிகள் தான் மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு அவர்களை கைது செய்து, பின் அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதைப் பற்றி விரிவாக பார்க்க வேண்டியுள்ளது.

**கைது, ஒப்புதல் வாக்குமூலம் அதன் அடிப்படையில் கைப்பற்றுதல்**

19. குற்ற நிகழ்வு நடந்த பின்பு எதிரிகளைக் கைது செய்து, எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலிசார்கள் படிவம் 91 மூலம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ள வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியுள்ளனர்.

20. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசாரிடம் கொடுத்துள்ளதால் அதை வைத்து எதிரிகள்தான் குற்றச்செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கருத இயலாது. மேற்படி குற்ற சம்பவத்தை எதிரிகள்தான் செய்தார்களா என்று அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்ய வேண்டும். அவ்வாறு பார்க்கையில் ஒப்புதல் வாக்குமூல சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 தனது முதல் விசாரணையில் " கடந்த 2019 ம் வருடம் தனது முதலாளி வீட்டில் நகை திருடுபோயிருந்தது என்றும், எதிரிகளை பிடித்து நகையை மீட்டார்கள் என்றும், பேங்கில் வைத்து நகையை கைப்பற்றியபோது நகை ஒப்படைப்பதற்காக கையொப்பம் பெற்றார்கள் என்றும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் என்னுடையது" என்று பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், மேற்படி எதிரிகளை அடையாளம் காட்டியோ அல்லது எதிரிகள் மேற்படி குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்பது குறித்தோ அல்லது போலீசாரிடம் ஒப்புக் கொண்டு வாக்குமூலம் அளித்ததாகவோ எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை.

21. ஆகவே, திருட்டு சம்பந்தமான குற்ற வழக்குகளில் அதிலும் எதிரியை அடையாளம் காண முடியாத வழக்குகளில் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றுதலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் அளிக்கின்ற சாட்சியங்களை வைத்து மட்டுமே எதிரிகளின் குற்றச் செயலை அறிய முடியும். ஆனால், மேற்சொன்னவாறு ஒப்புதல் வாக்குமூல சாட்சியும், அத்தாட்சி சாட்சியுமான அ.சா.6 எதிரிகள் தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்றோ அல்லது அவர்கள் குற்றச் செயலில் ஈடுபட்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவோ அல்லது தன் முன்னிலையில் கைப்பற்றுதலைப் பற்றியோ, அத்தாட்சி தயார் செய்யப்பட்டது பற்றியோ எந்தவொரு சாட்சியமும் அளிக்காத நிலையில் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் வழக்குச் சொத்து கைப்பற்றப்பட்டதா? என்றும், அந்த சொத்துக்கள் அனைத்தும் எதிரிகளிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டதா? என்று இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது.

**<u>புலன் விசாரணை, சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் குற்ற நிகழ்வு நிரூபிக்கப்பட்டுள்ளதா?</u>**

22. மேலும், இவ்வழக்கில் அ.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட புலன் விசாரணை அதிகாரி தனது முதல் விசாரணையில் "இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சார்பு ஆய்வாளர் ரபீக் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 11.09.2019 ம் தேதி

வாகனத்தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது TN 39 AU 5148 Splendor இருசக்கர வாகனத்தை நிறுத்தி விசாரித்தபோது எதிரிகள் தாமாக முன் வந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்ததாகவும், எதிரிகளை காரணம் கூறி கைது செய்தும், 2ம் எதிரி தனது வீட்டின் தாழ்வாரத்தில் வைத்திருந்த சுமார் 5 1/2 பவுன் தங்க தாலி செயினை எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

23. ஆனால், மேற்சொன்னவாறு ஒப்புதல் வாக்குமூல மற்றும் அத்தாட்சி சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.6 முதல் விசாரணையில் "பேங்கில் வைத்து நகையை கைப்பற்றியபோது நகை ஒப்படைப்பதற்காக சொல்லி என்னிடம் மட்டும் கையொப்பம் பெற்றார்கள்" என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்சொன்னவாறு கைப்பற்றுதலைப் பற்றி முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் வழக்கின் எதிரிகள்தான் மேற்படி குற்றச்செயலில் ஈடுபட்டு அவர்களிடமிருந்துதான் வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதா என்ற சந்தேகத்தை புலன் விசாரணை அதிகாரி தனது புலன் விசாரணை மூலம் உறுதியூட்டும் வகையில் சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. மேலும், இவ்வழக்கில் வேறு எந்த சாட்சிகளும் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவோ அல்லது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தது குறித்தோ, எதிரிகளிடமிருந்து வழக்குச் சொத்தை கைப்பற்றியது குறித்தோ உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. ஆகவே,

மேற்சொன்னவாறு சந்தேகம் உள்ளதால், எதிரிகள்தான் வழக்குச் சொத்தை திருடினார்கள் என்று கருத இயலாது.

25. முடிவாக, 1, 2 எதிரிகள் தான் புகார்தாரர் அணிந்திருந்த நகையை திருடினார்கள் என்பதை அரசு தரப்பிலிருந்து எதிரிகள் மீதான இதச பிரிவு 379-ன் கீழான குற்றச்சாட்டை தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பதே நீதியின் நலனுக்கு உதந்தது என்று கருதி, 1, 2 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

26. இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்ட வழக்குச் சொத்தான RPR No.164/2019 ல் உள்ள வழக்குச் சொத்தான சுமார் 5 -1/2 பவுன் தங்க தாலிசெயின் - 1 காசுகளுடன் கூடியது மட்டும் மனுதாரர் / வழக்குச் சொத்தின் உரிமையாளர் ஏற்கனவே மனுதாக்கல் செய்து Crl.M.P.No.7840/2019 நாள் 27.09.2019 ன் படி பெற்றுச் சென்றுள்ளதை மேல்முறையீடு காலத்திற்கு பின்பு மனுதாரர் / வழக்குச் சொத்தின் உரிமையாளருக்குப் பாத்தியப்பட இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.04.17 15:14:20 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**I. அரசு தரப்பு சாட்சிகள்**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | வாசவி<br>க/பெ. பெஞ்சமின் | 17.02.2026 | அ.சா.ஆ.1<br>அ.சா.ஆ.2 |
| 2. | அ.சா.2 | ஜான்பீட்டர்<br>த/பெ. தாமஸ் | 17.02.2026 | – |
| 3. | அ.சா.3 | ராஜசேகரன்<br>த/பெ. மோகன்தாஸ் | 17.02.2026 | – |
| 4. | அ.சா.4 | சுரேஷ்<br>த/பெ. முருகன் | 17.02.2026 | அ.சா.ஆ.3 |
| 5. | அ.சா.5 | சிவானந்தம்<br>த/பெ. பரமசிவம் | 17.02.2026 | – |
| 6. | அ.சா.6 | வெங்கிடுசாமி<br>த/பெ. ராஜாராம் | 09.03.2026 | அ.சா.ஆ.4 முதல்<br>அ.சா.ஆ.6 |
| 7. | அ.சா.7 | அரியவேல்<br>த/பெ. வேலாயுதம் | 10.03.2026 | அ.சா.ஆ.7 |
| 8. | அ.சா.8 | தெய்வம்<br>த/பெ. பெரியசாமி | 17.03.2026 | அ.சா.ஆ.8 முதல்<br>அ.சா.ஆ.11 வரை |

**II. அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 28.07.2019 | புகார் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.1 | 28.07.2019 | CD யுடன் கூடிய புகைப்படம் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.4 | 28.07.2019 | பார்வை மகஜர் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.6 | 28.07.2019 | 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.6 | 28.07.2019 | 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் |
| 6. | அ.சா.ஆ.6 | அ.சா.6 | 28.07.2019 | அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் |
| 7. | அ.சா.ஆ.7 | அ.சா.7 | 28.07.2019 | முதல் தகவல் அறிக்கை |
| 8. | அ.சா.ஆ.8 | அ.சா.8 | 28.07.2019 | மாதிரி வரைபடம் |
| 9. | அ.சா.ஆ.9 | அ.சா.8 | 28.07.2019 | 2ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 10. | அ.சா.ஆ.10 | அ.சா.8 | 28.07.2019 | அத்தாட்சி |
| 11. | அ.சா.ஆ.11 | அ.சா.8 | 28.07.2019 | படிவம் 91 |

**III. <u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

**IV. <u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.04.17 15:14:10 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**குறிப்பு:**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் 3 முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இவ்வழக்கின் விசாரணையின் போது 1ம் எதிரி வேறுவழக்கில் நீதிமன்ற காவலில் இருந்தார். 2ம் எதிரி பிணையில் இருந்தார்.